# ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் மெய்யியற் சிந்தனைகள் - சமகால உலகில் ஓர் மீள் பார்வை

**N. Sivakaran and C. Niroshan**
Department of Philosophy,
University of Jaffna

## Abstract

இவ் ஆய்வுக்கட்டுரையானது ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி சமகால இந்திய மெய்யியலுக்கு ஆற்றிய பங்களிப்புகளினையும் தனிமனித நடத்தை, ஆளுமை வளர்ச்சி மற்றும் சமூக ஒருமைப்பாடு போன்ற அவரது சிந்தனைகளின் முக்கியத்துவம் எவ்வளவு தூரம் சமகாலத்தில் பொருத்தப்பாடுடையது என்பதனை விமர்சனரீதியாக ஆராயவுள்ளது. ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் சிந்தனைகள் மனித இயல்புகள் பற்றியும் சமூகம் பற்றியும் தனிநபர் பிரச்சனைகள் பற்றியும் அவரின் தெளிந்த புரிதல்களிலிருந்து பிறந்தவை. அவ் சிந்தனைகள் புதுமையானவையாகவும், புரட்சிகரமானவையாகவும் இருந்ததுடன் உறங்கிக் கொண்டிருந்த மக்களை விழிப்படையவும் செய்திருந்தது. அவை உலகை அன்பும் அமைதியும் நிறைந்த புத்துணர்வான நிலைக்கு எடுத்துச் செல்வனவாகவும் அமைந்திருந்தன. அத்தகைய சிந்தனைகளை கால வரம்பிற்குட்படாத தீர்க்கதரிசனத்தில் வேரூன்றி இருப்பதனால் சமகால உலகில் மீள்பார்வைக்கு உட்படுத்த வேண்டிய தேவையினை வலியுறுத்துவதாக இக் கட்டுரை அமையவுள்ளது. ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி சிந்தனைகளில் அகப்புரட்சி அல்லது மனப் புரட்சி (Psychological Revolution) என்பது முதன்மையானது. பொருளாதார சீர்திருத்தம், சமூக சீர்திருத்தங்களினால் மட்டும் புதியதோர் உலகினை தோற்றுவிக்க முடியாது, பரிபூரண அடிப்படை மாற்றத்தை மனித மனம் அடைந்தால் மட்டுமே அது சாத்தியமாகும் என்ற அவருடைய திட நம்பிக்கை அவரது போதனைகளின் மையமாக இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தன்னளவில் மாற்றத்தை ஏற்படுத்தாது மேற்கொள்கின்ற எந்தவொரு செயற்பாடும் அல்லது மாற்றமும் பயனைத் தராது என்பது இதன் உட்கிடையாகவுள்ளது. பகுப்பாய்வு முறையியல், ஒப்பீட்டு முறையியல், விமர்சன முறையியல் என்பவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்படவுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஆய்வாக அமையும்.

**Keywords:** அகப்புரட்சி, உண்மையறிவு, சமூக சீர்திருத்தம், தேர்வற்ற அறிநிலை, மனித இயல்புகள்